மாகாண பொது நிர்வாக செயலகம், வட மாகாணம்
පළාත් රාජ්‍ය පරිපාලන කාර්යාලය, උතුරු පළාත
PROVINCIAL PUBLIC ADMINISTRATION SECRETARIAT,
NORTHERN PROVINCE

தொடர் இல:
යොමු අංකය:

எனது இல:
මගේ අංකය
My No: NP/02/18/GN/01

11.01.2011

மாகாணப் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: **NP/02/2011(01)**

அமைச்சின் செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
வட மாகாணம்

<u>இலங்கைக்கு வெளியேயான விடுமுறைகளை மட்டுப்படுத்தல்</u>

வட மாகாண கௌரவ ஆளுனரின் அறிவுறுத்தலின் பிரகாரம், இலங்கைக்கு வெளியேயான விடுமுறைகள் பின்வரும் வகையில் மட்டுப்படுத்தப்படுகின்றது.

1. மருத்துவத் தேவையின் பொருட்டு விடுமுறைக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்களுக்கு முழுமையாகத் தேவைப்படும் விடுமுறைக்கமைவாக தகுந்த ஆதாரங்களுடன் கௌரவ ஆளுனரின் அனுமதிக்காக உரிய தொடர்பாடல்களுடாக விண்ணப்பிக்க முடியும். இதனால் மீண்டும் மீண்டும் விடுமுறை நீடிப்புக்காக விண்ணப்பிப்பதனைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

2. மருத்துவ தேவை தவிர்ந்த ஏனைய தேவைகளின் பொருட்டான விடுமுறைகள் யாவும், கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்படும் காலப்பகுதிக்கு மட்டுமே ஏற்புடையதாகக் கொள்ளப்படும்.

   அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்கு மேலதிகமாக நீடிப்பிற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அத்துடன், அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்கு மேலதிகமாக அனுமதியை எதிர்பார்த்து விடுமுறையில் நிற்கும் செயற்பாடுகள் முற்றாக இல்லாதொழிக்கப்படல் வேண்டும். இவை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது. விடுமுறை அனுமதிக்கமைய உரிய காலத்தில் மீளக் கடமைக்கு அறிக்கையிடாதவிடத்து, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு பதவி வறிதாக்கல் கடிதம் வழங்கப்படல் வேண்டும்.

எனவே, இவ்விடயங்கள் தொடர்பாக, தங்கள் திணைக்களத்திலும், திணைக்களத்தின் கீழ் வரும் சகல அலுவலகங்களிலும் உள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*தி.இராசநாயகம்*
பிரதிப் பிரதம செயலாளர்

பிரதி: 01. பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம்
02. கௌரவ ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலகம், வட மாகாணம்

கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை, இலங்கை.
කන්නියා පාර, වරෝදයනගර්, ත්‍රිකුණාමලය, ශ්‍රී ලංකාව.
Kanniya Road, Varothayanagar, Trincomalee, Sri Lanka.
Gen Office : 026-3266502
Fax : 026-2226959
DCS : 026-3267151
: 026-2226959
Email : npminppa@sltnet.lk
Website : www.np.gov.lk